# தஞ்சாவூர் மாநகராட்சி

## மாமன்றக் கூட்ட தீர்மான நகல்

| Date of Meeting | Serial Number and subject in the Agenda (ORDINARY MEETING) | Decision of the City Corporation |
|---|---|---|
| 28.07.2023 | **219.** நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்கள், துணை மேயர்கள், மன்றத் தலைவர்கள், மன்றத் துணைத் தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு ஜூலை 2023 முதல் மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கிட உத்திரவிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 13.07.2023 மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு :<br>பதிவு செய்யலாம். (ந.க.எண்.4501/2022/சி5) | பதிவு செய்திட தீர்மானிக்கப்படுகிறது |
| 28.07.2023 | 220. இம்மாநகராட்சி வருவாய் பிரிவில் கோட்டம் எண்-III-க்கான தட்டச்சு பணி மேற்கொள்ளுதல், சொத்துவரி தொடர்பான ஒருங்கிணைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் உள்ளாட்சி தேர்தல் தொடர்பான தட்டச்சு பணிகளை மேற்கொண்டு வரும் ஒப்பந்த அடிப்படையில் (Outsourcing) ஒரு எண்ணிக்கை தட்டச்சருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களின் ந.க.எண்.15720/2022/ஜி2, நாள்.10.10.2022 ஆம் தேதிய செயல்முறைகளின்படி நாள் ஒன்றுக்கு ரூ.650/- வீதம் Schedule of Rate அடிப்படையில் 2023-24 ஆம் நிதியாண்டிற்கு தினக்கூலித் தொகை வழங்கிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,40,000/-க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு:<br>மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.13003 /2023/எம்சிஏ1) | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது |
| 28.07.2023 | **221.** தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட 51 வார்டுகளில் சொத்துவரி, தொழில்வரி, வரியில்லா இனம், காலிமனை வரி, குடிநீர் கட்டணம் (புதைகுழி) பாதாள சாக்கடை பயன்பாட்டு கட்டண வசூல் பணி மற்றும் தட்டச்சு பணிக்கு நான்கு கோட்டங்களுக்கும் 12 நபர்கள் சுய உதவிக்குழு மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால், அவசர அவசியம் கருதி 2023–2024ம் நிதியாண்டிற்கான 01.08.2023 முதல் 31.12.2023 வரை 153 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு 12 பணியாளர்களை கொண்டு (153 x 12 = 1836) மனித நாட்களுக்கு (1836x550) மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களின் 2023–2024ம் தேதி நிதி ஆண்டிற்கான தினக்கூலி விலை நிர்ணயம் செய்து ந.க.எண்.15720/2022/ஜி2, நாள்.10.10.2022ன் படி நாள் நபர் ஒருவருக்கு தொகை ரூ.550/– வீதம் வழங்கிட ஆகும் | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது |

| | | | |
|---|---|---|---|
| | | உத்தேச செலவினம் தொகை ரூ.10,09,800/– (ரூபாய் பத்து இலட்சத்து ஒன்பது ஆயிரத்து என்னூறு மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.13825/2022/எம்சிஏ5) | |
| 28.07.2023 | 222. | தஞ்சாவூர் நகராட்சியானது மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படுவதற்கு முன்னர் சென்னை உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை இயக்குநரால் ஒய்வூதிய முன் மொழிவுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு ஒய்வூதிய பயன்கள் மற்றும் மாதாந்திர ஒய்வூதியம் சென்னை உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையால் நேரடியாக சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்தது.<br>ஆனால் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பிறகு 19.02.2014 முதல் பணியிலிருந்து ஒய்வு பெறும் பணியாளர்கள் மற்றும் பணியிடை காலமான பணியாளர்களுக்கு மாநகராட்சி நிர்வாகத்தாலேயே ஒய்வூதிய பயன்கள் வழங்கப்பட வேண்டும் என்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.23057/2014/மாநஅ2, நாள் 28.01.2015–ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இயக்குநர் (நகராட்சி ஒய்வூதியம் மற்றும் சரிபார்ப்பு பிரிவு), உள்ளாட்சி நிதித்தணிக்கை, சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.8000/நஒச(5)/2015, நாள் 30.03.2015–ன்படி தஞ்சை மாநகராட்சியில் 19.02.2014–க்கு பிறகு ஒய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஒய்வூதியம் மற்றும் பயன்கள் அனுமதிப்பதற்கு உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, தஞ்சாவூர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br>அதன்படி இம்மாநகராட்சியில் 2023–2024ம் ஆண்டு ஒய்வு பெறும் மற்றும் பணியிடை காலமான பணியாளர்களுக்கு ஒய்வூதியம் மற்றும் குடும்ப ஒய்வூதியம் வழங்க அனுமதிப்பதற்கு ஏதுவாக, உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, தஞ்சாவூர் அவர்களின் தணிக்கைச் சான்றின் அடிப்படையில் ஒய்வூதிய பயன்கள் மற்றும் குடும்ப ஒய்வூதிய பயன்கள் அனுமதிப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.5450/2018/பி2) | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது |

<table>
<tr>
<td>28.07.2023</td>
<td>
223. இம்மாநகராட்சியில் உதவி ஆணையர் அவர்கள் 17.05.2023 முதல் பணிபுரிந்து வருகிறார். அன்னாருக்கு தனி அறை ஒதுக்கீடு செய்யப்பட்டு அலுவலக அறைக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. மேலும் உதவி ஆணையர் அவர்கள் வருவாய் பிரிவு தொடர்பான அனைத்து பணிகள் மற்றும் UPIS தொடர்பான பணிகளை கவனிப்பதற்கு தொடுதிரை தட்டச்சு கணினி தேவைப்படுகிறது. எனவே கீழ்க்கண்ட நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளியின் தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>Opal Systems</td><td>1,17,339/-</td></tr>
<tr><td>2</td><td>Unicon System</td><td>1,19,522/-</td></tr>
<tr><td>3</td><td>JP Traders</td><td>1,13,988/-</td></tr>
</table>
மேற்கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள JP Traders நிறுவனத்திற்கு தொடுதிரை கணினி வாங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலககுறிப்பு</u><br>
மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1172 /2023/டி1)
</td>
<td>அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது</td>
</tr>
<tr>
<td>28.07.2023</td>
<td>
224. இம்மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் பள்ளிகளில் கல்வி பயின்று வரும் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் ஜுன் 30-ம் தேதியன்று “இந்து தமிழ் திசை” சிறப்பிதழ் வழங்குவது குறித்து KSL Media Limited 27.06.2023-ம் தேதியன்று விண்ணப்பம் அளித்துள்ளார். இம்மாநகராட்சி நடுநிலைப்பள்ளிகள், உயர் நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் செல்போன் செயலிருந்து மீட்பதும் மற்றும் இணையத்தை பயன்படுத்துவது குறித்து வழிகாட்டியாக “இந்து தமிழ் திசை” சிறப்பிதழ் ஒன்றுக்கு ரூ.8 வீதம் 1500 நாளிதழ்க்குரிய செலவினத்தொகை ரூ.12,000/- (பன்னிரெண்டாயிரம் மட்டும்) KSL Media Limited நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலககுறிப்பு</u><br>
1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.16340/2021/சி3)
</td>
<td>அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>28.07.2023</td>
<td>225.</td>
<td>இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.39 அண்ணா நகர் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதினால் பள்ளி மாணவர்கள் நலன் கருதி கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகளை மேற்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுதொகை ரூ.50.00/– இலட்சத்தை (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) 16.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td></tr>
<tr><td>1.</td><td>திரு. R.கதிரவன், தஞ்சாவூர்</td><td>41,02,896.17</td><td>மதிப்பீட்டு தொகையை விட (–) 0.05% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு. S.ரமேஷ், தஞ்சாவூர்</td><td>41,20,874.81</td><td>மதிப்பீட்டு தொகையை விட (+) 0.39% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு</u><br>
1. மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்டுள்ள, மதிப்பீட்டு தொகையான ரூ.41,05,027/–க்கு (–) 0.05% குறைவாக ரூ.41,02,896.17/– என்ற விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.R.கதிரவன், தஞ்சாவூர் என்ற ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.9855/2022/எம்சிஇ1)</td>
<td>அலுவலக குறிப்பை ஏற்க தீர்மானிக்கப்படுகிறது</td>
</tr>
<tr>
<td>28.07.2023</td>
<td>226.</td>
<td>தஞ்சாவூர் மாநகராட்சி மாண்புமிகு மேயர் அவர்களின் அலுவலக பயன்பாட்டுக்காக இயக்கப்பட்டு வரும் TN 49 CP 0005 INNOVA CRYSTA G Plus - Diesel வாகனம் 40000 கி.மீட்டருக்கு மேல் இயக்கப்பட்டுள்ளதால், மேற்படி வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் செய்ய வேண்டியுள்ளதினால், வாகனம் கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனத்திலேயே ஆயில் சர்வீஸ் செய்தமைக்கு M/s. Anaamalais TOYOTA, Thanjavur என்ற நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகையாக ரூ.17,644/-ஐ (ரூபாய் பதினேழாயிரத்தி அறுநூற்றி நாற்பத்தி நான்கு மட்டும்) வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>
<u>அலுவலக குறிப்பு</u>:<br>
1) மேற்கண்ட வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் செய்யும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.17,644/-ஐ (ரூபாய் பதினேழாயிரத்தி அறுநூற்றி நாற்பத்தி நான்கு மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.</td>
<td>அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | 2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023-24 வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) மேற்கண்ட நிறுவனத்திற்கு தொகை வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண்.9164/2022/எம்சிஇ5) | |
| 28.07.2023 | 227. தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் அவர்களின் அலுவலக பயன்பாட்டுக்காக இயக்கப்பட்டு வரும் TN 49 BJ 5052 INNOVA வாகனத்தின் பேட்டரி பழுதடைந்துள்ளதினால், மேற்படி வாகனத்தை இயக்க முடியாத நிலை உருவாகிறது, எனவே பணியின் அவசர அவசியம் கருதி, வாகனம் கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனத்திலேயே பேட்டரி புதிதாக வாங்கி பொருத்தும் பணிக்கு M/s. Anaamalais TOYOTA, Thanjavur என்ற நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகையாக ரூ.6090/- (ரூபாய் ஆறாயிரத்தி தொன்னூறு மட்டும்) வரப்பெற்றுள்ளதை, மேற்படி நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><u>அலுவலக குறிப்பு</u>:<br>1) மேற்கண்ட வாகனத்திற்கு புதிதாக பேட்டரி வாங்கி பொருத்தும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.6090/- (ரூபாய் ஆறாயிரத்தி தொன்னூறு மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023-24 வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) மேற்கண்ட நிறுவனத்திற்கு தொகை வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.9164/2022/எம்சிஇ5) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |
| 28.07.2023 | 228. இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.33 கோரிக்குளத்திற்குட்பட்ட பகுதிகள் (1.தென்வெட்டுக்காரத்தெரு பவர் பம்ப், 2.பூக்கார புது வஸ்தா தெரு, 3. பூக்கார வஸ்தா தெரு) மற்றும் வார்டு எண்.36 பல்லாக்கு தெருவிற்குட்பட்ட (1.சுப்பிரமணி கோவில் தெரு, 2.பூக்கார மீன்மார்க்கெட் அருகில்) பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் இருந்து விநியோகம் செய்யப்படுகின்ற குடிநீரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தஞ்சாவூர் அலுவலகத்திற்கு நீர்மாதிரி பகுப்பாய்வு செய்வதற்கு மேற்படி தொகை ரூ.1652/- வீதம் 2 எண்ணிக்கையிலான நீர்மாதிரி பகுப்பாய்வுக்கு கட்டணத்தொகை ரூ.3304/- ஐ (ரூபாய் மூவாயிரத்தி முன்னூற்றி நான்கு மட்டும்) வரைவோலையாக செலுத்திட மாமன்றத்தின் ஒப்புதலுக்கு. | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு:<br>1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023-24ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. நீர்மாதிரி பகுப்பாய்வு செய்வதற்கான கட்டணத்தொகையினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தஞ்சாவூர் அவர்களுக்கு தொகை செலுத்தப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.4556/2020/எம்சிஇ5) | |
| 28.07.2023 | 229. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட ஊரக முகமை தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3331/2021/அ2, நாள்.26.04.2023ல் பரிந்துரை செய்யப்பட்ட, தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண்.40 யாகப்பா நகரில் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.10,00,000/-க்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 28.06.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளதில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு. | அலுவலக குறிப்பை ஏற்க தீர்மானிக்கப்படுகிறது |

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு.சி.பாஸ்கர், தஞ்சாவூர் | 787780.00 | மதிப்பீட்டு தொகையை விட (-) 0.05% குறைவு |
| 2 | திரு.S.கோபி, தஞ்சாவூர் | 792662.00 | மதிப்பீட்டு தொகையை விட (-) 0.56% அதிகம் |

அலுவலக குறிப்பு

1. மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.1ல் கண்டுள்ள (-) 0.05% குறைவாக ரூ.787780/- என்ற விலைவிகிதத்தல் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.பாஸ்கர், தஞ்சாவூர் என்ற ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.12414/2022/எ ம்சிஇ6)

| | | |
|---|---|---|
| 28.07.2023 | 230. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட ஊரக முகமை தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3331/2021/அ2, நாள்.26.04.2023ல் பரிந்துரை செய்யப்பட்ட, தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண்.40 குழந்தை அம்மாள் நகரில் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.10,00,000/-க்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 28.06.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளதில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><br>\| வ. எண் \| ஒப்பந்ததாரர் பெயர் \| ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. \| சதவீதம் \|<br>\| 1 \| 2 \| 3 \| 4 \|<br>\| 1 \| திரு.சி.பாஸ்கர், தஞ்சாவூர் \| 787780.00 \| மதிப்பீட்டு தொகையை விட (-) 0.05% குறைவு \|<br>\| 2 \| திரு.S.கோபி, தஞ்சாவூர் \| 792662.50 \| மதிப்பீட்டு தொகையை விட (-) 0.56% அதிகம் \|<br><br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.1ல் கண்டுள்ள (-) 0.05% குறைவாக ரூ.787780/- என்ற விலைவிகிதத்தல் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.பாஸ்கர், தஞ்சாவூர் என்ற ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம்.<br><br>(ந.க.எண்.12414/2022/எம்சிஇ6) | அலுவலக குறிப்பை ஏற்க தீர்மானிக்கப்படுகிறது |
| 28.07.2023 | **231.** தஞ்சாவூர் மாநகராட்சி சீர்மிகு நகர திட்ட பணிகள் நடைபெற்று வருவதால் மேற்படி திட்டப்பணிகளுக்கு நில அளவை தொடர்பான பணிகள் மேற்கொள்ளவும், நிர்வாக நலன் கருதி இம்மாநகராடசியில் பணி புரிந்து அனுபவம் வாய்ந்த பணி ஓய்வு பெற்ற திரு S.மீனாட்சிசுந்தரம் நகர சார் ஆய்வரை அவசர அவசியம் கருதி நாள் ஒன்றுக்கு ரூ.**514/–** வீதம் ஆகஸ்ட் **2023** முதல் டிசம்பர் **2023** வரை **5** மாதங்களுக்கு நீட்டித்து ஒப்பந்த அடிப்படையில் பயன்படுத்தி கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.**80,000/–**க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது |

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.14799/2004/MCF4)

**28.07.2023**

**232.** தமிழக அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் ஆகியோரால் **31.05.2022** அன்று நடைபெற்ற ***"நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம்"*** குறித்த காணொலிக் காட்சி ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படியும், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் பிறந்த தினமான **03.06.2022** அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் ***"நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம்"*** சென்னை மாநகராட்சியில் துவங்கி வைக்கப்பட இருப்பதை முன்னிட்டும், அனைத்து நகர்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் விழிப்புணர்வு ஏற்படுத்திட அறிவுறுத்தப்பட்டது. அதன்படி தஞ்சாவூர் மாநகராட்சி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு Harris Impex, ஆத்துப்பாலம், காந்திஜி ரோடு, தஞ்சாவூர் நிறுவனத்திடம் ஏற்கெனவே **01.06.2022** அன்று அளித்த அதே விலைப்புள்ளி விலைவிகிதத்தில் விளம்பர பிளக்ஸ் QR Code Board, Feedback Sticker, My waste My Responsibility Flex மற்றும் கீழ்கண்டவாறு அச்சடித்து வழங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.**2.00** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| SI.No | Issued Date | Description | Size | Qty | Rate |
|---|---|---|---|---|---|
| 1 | 10.06.2022 | My Waste My Responsibility Flex | 4 X 3 | 5 | 708 |
| 2 | 10.06.2022 | Flex With Steel Frame | 5 X 3 | 2 | 2596 |
| 3 | 10.06.2022 | Flex With Steel Frame | 3 X 2 | 10 | 6490 |
| 4 | 18.07.2022 | My Waste My Responsibility Flex | 4 X 3 | 2 | 283 |
| 5 | 18.07.2022 | Flex With Steel Frame | 4 X 3 | 10 | 8850 |
| 6 | 15.08.2022 | Independence Day Invitation | A4 | 150 | 6667 |
| 7 | 26.01.2023 | Republic Day Invitation | A4 | 100 | 4484 |
| 8 | 1.02.2023 | Plastic Awarness A4 Notice | A4 | 15000 | 20060 |
| 9 | 1.02.2023 | Certificate | A4 | 200 | 3540 |
| 10 | 1.02.2023 | Certificate | A4 | 800 | 14160 |
| 11 | 25.02.2023 | QR Code Board | A4 | 50 | 50150 |
| 12 | 25.02.2023 | Feedback Sticker | AF | 45 | 1593 |
| | | **Total** | | | **1,19,581** |

<u>அலுவலக குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5649/2022/எச்.8)

அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது

**28.07.2023**

**233.** தமிழக அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் ஆகியோரால் **31.05.2022** அன்று நடைபெற்ற ***“நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம்”*** குறித்த காணொலிக் காட்சி ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படியும், முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் பிறந்த தினமான **03.06.2022** அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் ***“நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம்”*** சென்னை மாநகராட்சியில் துவங்கி வைக்கப்பட இருப்பதை முன்னிட்டும், அனைத்து நகர்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் விழிப்புணர்வு ஏற்படுத்திட அறிவுறுத்தப்பட்டது. அதன்படி தஞ்சாவூர் மாநகராட்சி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு Harris Impex, ஆத்துப்பாலம், காந்திஜி ரோடு, தஞ்சாவூர் நிறுவனத்திடம் ஏற்கெனவே **01.06.2022** அன்று அளித்த அதே விலைப்புள்ளி விலைவிகிதத்தில் விளம்பர பிளக்ஸ் Selfi Stand (SwachhateKe Do Rang), Smokeless Bhogi Notice, Plastic Waste Awarmess Stickerமற்றும் கீழ்கண்டவாறுஅச்சடித்து வழங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.**2.00** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| SI.No | Issued Date | Description | Size | Qty | Rate |
|---|---|---|---|---|---|
| 1 | 20.12.2022 | Selfi Stand (SwachhateKe Do Rang | | 4 | 23600 |
| 2 | 20.12.2022 | A4 Notice (SwachhateKe do Rang | | 10000 | 17700 |
| 3 | 20.12.2022 | Flex (Swachhateke do Rang) | 5 X 4 | 13 | 3068 |
| 4 | 11.01.2023 | Smokeless Bhogi Notice | | 15000 | 20060 |
| 5 | 11.01.2023 | Smokeless Bhogi Flex | 8 X 6 | 10 | 56640 |
| 6 | 11.01.2023 | Smokeless Bhogi Flex | 6 X 4 | 16 | 4531 |
| 7 | 11.01.2023 | Smokeless Bhogi Flex | 3 X 2 | 49 | 283 |
| 8 | 11.01.2023 | A4 Pamplets (Front & Back) | | 25000 | 42480 |
| 9 | 28.01.2023 | Plastic Waste Awarmess Sticker | | 30 | 1062 |
| 10 | 30.01.2023 | Flex | 8 X 4 | 2 | 755 |
| 11 | 30.01.2023 | Flex | 8 X 5 | 3 | 1416 |
| 12 | 30.01.2023 | Flex | 5 X 4 | 2 | 472 |
| 13 | 03.02.2023 | Flex | 6 X 4 | 1 | 283 |
| 14 | 25.02.2023 | Office Cover Sticker | | 100 | 1298 |
| 15 | 25.02.2023 | Flex | 4 X 3 | 1 | 141 |
| 16 | 05.03.2023 | Flex With Steel Frame | 7 X 3 | 1 | 1534 |
| 17 | 05.03.2023 | Flex With Steel Frame | 3 X 3 | 1 | 531 |
| 18 | 05.03.2023 | Flex | 3 X 2 | 10 | 1180 |
| | | **Total** | | | **1,31,558** |

அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு</u><br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5649/2022/எச்.8) | |
| 28.07.2023 | **234.** இம்மாநகராட்சியின் பொது சுகாதார பிரிவிற்கு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 39 வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான வாகன ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள Softberry Solutions, Coimbatore நிறுவனத்திற்கு ஒப்பந்தப்பணி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இதற்கான ஒப்பந்தக்காலம் 28.02.2023ல் முடிவடைவதால் பணியின் அவசர அவசியம் கருதி மேலும் ஒரு மாதத்திற்கு (01.03.2023 முதல் 31.03.2023 வரை) நீட்டிப்பு செய்திடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 8,00,000/– (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்)–க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1177/2021/எச்8) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |
| 28.07.2023 | **235.** இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை திறம்பட செயல்படுத்திட பொது சுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் இயக்கும் 180 எண்ணிக்கையிலான வாகனங்களின் இயக்கத்தினை அன்றாடம் கண்காணிக்க GPS Vehicle Tracking Device பொருத்தி கண்காணித்திட குறைந்த விலைப்புள்ளி அளித்த Softberry Solutions, Coimbatore நிறுவனத்திற்கு ஒப்பந்தப்பணி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இதற்கான ஒப்பந்தக்காலம் 11.04.2023ல் முடிவடைவதால் பணியின் அவசர அவசியம் கருதி மேலும் 3 மாதங்களுக்கு (12.04.2023 முதல் 12.07.2023 வரை) நீட்டிப்பு செய்திடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.8,00,000/– (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்)–க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.9061/2021/எச்8) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

| | | | |
|---|---|---|---|
| 28.07.2023 | 236. | இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை திறம்பட செயல்படுத்திட திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் அன்றாட பணிகளை கண்காணித்திட Personal Tracking Sim 594 நபர்களுக்கு பொருத்தி GPS Tracking கருவி மூலம் கண்காணிக்கும் பணியினை Softberry Solutions, Karaikudi நிறுவனத்திற்கு ஒப்பந்தப்பணி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இதற்கான ஒப்பந்தக்காலம் 12.03.2023ல் முடிவடைவதால் பணியின் அவசியம் கருதி மேலும் 120 நாட்களுக்கு (13.03.2023 முதல் 30.06.2023 வரை) நீட்டிப்பு செய்திடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10,50,000/- (ரூபாய் பத்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.9060/2021/எச்8) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |
| 28.07.2023 | 237. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 1 முதல் 51 வரையிலான வார்டுகளில் டெங்கு காய்ச்சல் மற்றும் கொரோனா நோய் தொற்று தடுப்பு பணி தொடர்பாக தினசரி வீடு வீடாக சென்று கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளும் 210 எண்ணிக்கையிலான DBC பணியாளர்களின் அன்றாட பணிகளை Personal Tracking Sim பொருத்தி கண்காணித்திட குறைந்த விலைப்புள்ளி அளித்த Softberry Solutions, Coimbatore நிறுவனத்திற்கு ஒப்பந்தப்பணி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இதற்கான ஒப்பந்தக்காலம் 26.03.2023ல் முடிவடைவதால் இப்பணியின் அவசர அவசியம் கருதி மேலும் மூன்று மாதங்களுக்கு (27.03.2023 முதல் 26.06.2023 வரை) நீட்டிப்பு செய்திடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,65,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரம் மட்டும்)-க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.9433/2021/எச்8) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |
| 28.07.2023 | 238. | இம்மாநகராட்சியின் பொது சுகாதார பிரிவிற்கு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 39 வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான வாகன ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள Softberry Solutions, Coimbatore நிறுவனத்திற்கு ஒப்பந்தப்பணி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இதற்கான ஒப்பந்தக்காலம் 31.03.2023ல் முடிவடைவதால் பணியின் அவசர | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

<table>
<tr><td></td><td></td><td>அவசியம் கருதி மேலும் ஒரு மாதத்திற்கு (01.04.2023 முதல் 30.04.2023 வரை) நீட்டிப்பு செய்திடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 8,00,000/– (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்)–க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1177/2021/எச்8)</td><td></td></tr>
<tr><td>28.07.2023</td><td>239.</td><td><u>மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u><br>தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள கீழ்கண்டுள்ள கட்டிடங்களுக்கும், சாலைக்கும் தமிழ்நாட்டு மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ள முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவினை சிறப்பித்திடும் வகையில் கீழ்கண்டவாறு பெயர் சூட்டலாம்.
<table>
<tr><th>வ.எண்</th><th>கட்டிட விபரம்</th><th>சூட்டப்பட வேண்டிய பெயர்</th></tr>
<tr><td>1)</td><td>புதிய பேருந்து நிலைய வளாகத்தில் ஆம்னி பேருந்து நிலையத்திற்கு அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள கன்வென்ஷன் ஹால்</td><td>முத்தமிழ் அறிஞர் மாளிகை</td></tr>
<tr><td>2)</td><td>பழைய திருவையாறு பேருந்து நிலைய வணிக வளாகம்</td><td>கலைஞர் முத்துவேல் கருணாநிதி வணிக வளாகம்</td></tr>
<tr><td>3)</td><td>அண்ணா சாலையில் சரபோஜி மார்க்கெட்டுக்கு முன்பாக புதிதாக கட்டப்பட்டு வரும் வணிக வளாகம்</td><td>பேரறிஞர் அண்ணா வணிக வளாகம்</td></tr>
<tr><td>4</td><td>வல்லம் குவாரி சாலை</td><td>தமிழ்ச்சாலை</td></tr>
</table>
எனவே மேற்கண்டவாறு புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டிடங்களுக்கும், சாலைக்கும் பெயர்கள் சூட்டிட தஞ்சை மாநகர மக்களின் சார்பாகவும், மாண்புகள் நிறைந்த இம்மாமன்றத்தின் சார்பாகவும் தீர்மானம் நிறைவேற்றிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேறியது</td></tr>
<tr><td>28.07.2023</td><td>240.</td><td>திரு எஸ்.செந்தமிழ்செல்வன், 1வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>1வது வார்டில் உள்ள பள்ளியக்கிரஹாரம் ஜம்பு காவேரி தெரு அருகில் உள்ள காலபைரவர் கோயில் பகுதியிலிருந்து பள்ளியக்கிரஹாரம் மேலத் தெருவை இணைக்கும் மண் சாலையை தார் சாலையாக அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>முன் மொழிந்தவர் :<br>திரு எஸ்.செந்தமிழ் செல்வன்<br>வழி மொழிந்தவர் :<br>திரு க.அய்யப்பபன்<br>நிறைவேறியது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 28.07.2023 | 241. | திரு க.அய்யப்பன், 2வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>2வது வார்டில் உள்ள கரந்தை பூக்குளம் பகுதியில் சிறுவர் பூங்கா அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு க.அய்யப்பபன்<br>வழி மொழிந்தவர் :<br>திரு எஸ்.செந்தமிழ் செல்வன்<br>நிறைவேறியது |
| 28.07.2023 | 242. | திருமதி து.சுகந்தி, 3வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>3வது வார்டில் உள்ள ராமையா நகர் பகுதியில் புதிதாக சிறுவர் பூங்கா அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி து.சுகந்தி<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி இ.சுமதி<br>நிறைவேறியது |
| 28.07.2023 | 243. | திரு ச.விஜயபாபு, 7வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>7வது வார்டில் உள்ள வடக்குவாசல் ஏ.ஒய்.ஏ.நாடார் ரோடு நகர்நல மருத்துவமனை அருகில் வணிக வளாகம் கட்டிட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு சா.விஜயபாபு<br>வழி மொழிந்தவர் :<br>திரு ஜி.ஆனந்த்<br>நிறைவேறியது |
| 28.07.2023 | 244. | திரு சு.முகம்மது சுல்தான் இப்ராஹிம், 8வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>8வது வார்டு வடக்கலங்கத்தில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் ரேசன் கடையில் அனைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் வடக்கு வீதியில் உள்ள சிறிய சந்துகளில் பேவர் பிளாக் சாலைகள் அமைத்திடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு சு.முகம்மது சுல்தான் இப்ராஹீம்<br>வழி மொழிந்தவர் :<br>திரு எஸ்.பாலசுப்ரமணியன்<br>நிறைவேறியது |
| 28.07.2023 | 245. | திரு தி.புண்ணியமூர்த்தி, 10வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>10வது வார்டில் உள்ள கும்பகோணத்தான் தெரு, வடவாற்றாங்கரையில் உள்ள ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீநாகநாத சுவாமி கோவிலின் முன்புறமும், பின்புறமும் உள்ள இரண்டு குளங்களை தூர்வாரி, குளத்தை சுற்றிலும் நடைபாதை அமைத்திடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு தி.புண்ணியமூர்த்தி<br>வழி மொழிந்தவர் :<br>திரு செ.வெங்கடேஷ்<br>நிறைவேறியது |
| 28.07.2023 | 246. | திருமதி ஜெ.சுகாசினி, 13வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>13வது வார்டுக்குட்பட்ட STM நகர் பூங்காவில் விளையாட்டு மைதானம் (உடற்பயிற்சி கூடம் உட்பட) அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி ஜெ.சுகாசினி<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி ஆர்.சசிகலா<br>நிறைவேறியது |
| 28.07.2023 | 247. | திருமதி ஆர்.சசிகலா, 18வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>18வது வார்டுக்குட்பட்ட மேல அலங்கத்தில் உள்ள அங்கன்வாடியை சுற்றி உள்ள தரை தளத்தில் பேவர் பிளாக் தளம் அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி ஆர்.சசிகலா<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி ஜெ.சுகாசினி<br>நிறைவேறியது |

| | | | |
|---|---|---|---|
| 28.07.2023 | 248. | திரு ஆர்.தெட்சிணாமூர்த்தி, 25வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>25வது வார்டில் உள்ள தென்கீழ் அலங்கம் மாநகராட்சி பள்ளிக்கு மாணவர்கள் அமரும் பெஞ்ச் மற்றும் டெஸ்க் 50 எண்ணிக்கை (Stainless Steel) மற்றும் மாணவர்களின் வகுப்பறைக்கு ஒன்று வீதம் மேசை மற்றும் நாற்காலிகள் வழங்கிடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு ஆர்.தெட்சிணாமூர்த்தி<br>வழி மொழிந்தவர் :<br>திரு ஜெ.வி.கோபால்<br>நிறைவேறியது |
| 28.07.2023 | 249. | திருமதி எ.ஸ்டெல்லா நேசமணி, 29வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>29வது வார்டில் உள்ள ரெசிடெண்ட் பங்களா ரோடு பகுதியில் அமைந்துள்ள ஆதாம்கான் வாய்க்காலில் மீதமுள்ள பகுதி மற்றும் மிஷன் சர்ச் ரோடு மேக்ஸ்வெல் பள்ளி அருகில் அமைந்துள்ள கழிவு நீர் மற்றும் மழை நீர் வடிகால் ஆகியவற்றை புதிதாக கட்டி மேலே மூடி அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி ஏ.ஸ்டெல்லா நேசமணி<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி வி.செந்தில்குமாரி<br>நிறைவேறியது |
| 28.07.2023 | 250. | திரு டி.லெனின், 32வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>32வது வார்டில் உள்ள அலமேலு நகர் பூங்காவை விரிவுபடுத்தி புதுப்பொலிவுடன் சீரமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு டி.லெனின்<br>வழி மொழிந்தவர் :<br>திரு சு.செந்தில்<br>நிறைவேறியது |
| 28.07.2023 | 251. | திரு சு.செந்தில், 34வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>34வது வார்டில் உள்ள பழுதடைந்த மின் கம்பங்களை புதிதாக மாற்றியும், சாலைகளில் இடையூறாக உள்ள மின் கம்பங்களை அகற்றி ஓரமாக அமைத்திடவும் மற்றும் மின் கம்பம் மட்டும் உள்ள இடங்களில் மின் கம்பிகளை இழுத்து பிட்டிங் பொருத்தி மின் இணைப்பு வழங்கிடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு சு.செந்தில்<br>வழி மொழிந்தவர் :<br>திரு டி.லெனின்<br>நிறைவேறியது |
| 28.07.2023 | 252. | திருமதி வி.கண்ணுக்கினியாள், 36வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>36வது வார்டு பூக்கார 2ம் தெரு மற்றும் பூக்கார மாதா கோவில் தெரு ஆகிய தெருக்களில் புதிதாக பாலங்கள் கட்டிட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி வி.கண்ணுக்கினியாள்<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி மு.வைஜெயந்திமாலா<br>நிறைவேறியது |
| 28.07.2023 | 253. | திருமதி ச.ரம்யா, 38வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>38வது வார்டு விளார் சாலை அண்ணா நகர் 8ம் தெருவில் கட்டப்பட்டுள்ள பயணியர் நிழற்குடைக்கு "கலைஞர் நூற்றாண்டு நினைவு பயணியர் நிழற்குடை" என பெயர் சூட்டிட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி ச.ரம்யா<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி ரா.தமிழரசி<br>நிறைவேறியது |
| 28.07.2023 | 254. | திருமதி எம்.உஷா, 39வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>39வது வார்டு அண்ணா நகர் 14ம் தெருவில் உள்ள நகர்நல மையத்தில் சுற்றுச்சுவர், தளம் மற்றும் மேற்கூரை அமைத்து கண்காணிப்பு கேமரா பொருத்தி, நோயாளிகள் அமருவதற்கு பெஞ்சுகள் அமைத்திடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி மா.உஷா<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி ச.ரம்யா<br>நிறைவேறியது |

| | | |
|---|---|---|
| 28.07.2023 | **255.** திரு ஜெ.சரீப், 47வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>47வது வார்டில் உள்ள மானோஜிப்பட்டி மெயின் ரோடு, அண்ணா நகர் 2, 3, 4, 5, 6ம் தெருக்கள், சுப்ரமணியபுரம் 5ம் தெரு மற்றும் கார்முகில் நகர் 1, 2, 3 குறுக்குத்தெரு ஆகிய சாலைகளை செப்பனிட்டு புதிதாக தார் சாலைகள் அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு ஜெ.சரீப்<br>வழி மொழிந்தவர் :<br>திரு க.கலையரசன்<br>நிறைவேறியது |
| 28.07.2023 | **256.** திருமதி சர்மிளாதேவி ராஜா, 48வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>48வது வார்டுக்குட்பட்ட தேவன் நகரில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சமுதாய கூடம் கட்டிட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது | முன் மொழிந்தவர் :<br>திருமதி சர்மிளாதேவி ராஜா<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி பி.டெய்சிராணி<br>நிறைவேறியது |
| 28.07.2023 | **257.** திருமதி பி.டெய்சிராணி, 49வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>49வது வார்டுக்குட்பட்ட முனிசிபல் காலனி 4ம் தெரு மற்றும் 8ம் தெருக்களில் பூங்கா அமைத்து நடைபாதை தளம் அமைத்திடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது | முன் மொழிந்தவர் :<br>திருமதி பி.டெய்சிராணி<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி சர்மிளாதேவி ராஜா<br>நிறைவேறியது |

நாள் : **01.08.2023**
இடம்: தஞ்சாவூர்.

ஒம்./ சண்.இராமநாதன்,
மேயர்.

// உண்மை நகல் //

**மேயர்,**
தஞ்சாவூர் மாநகராட்சி.

பெறுநர்

1) மாவட்ட ஆட்சித்தலைவர், வளர்ச்சி பிரிவு, தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–600 028 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, உடன் தணிக்கை பிரிவு, தஞ்சாவூர் மாநகராட்சி.

நகல் உதவி திட்ட அமைப்பாளர், தஞ்சாவூர் மாநகராட்சி (மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய)
„ சி5–மாமன்றக்கூட்ட எழுத்தர்.
„ அலுவலக விளம்பர பலகை.

## தஞ்சாவூர் மாநகராட்சி
## மாமன்றக் கூட்ட தீர்மான நகல்

<table>
<tr><th>Date of Meeting</th><th>Serial Number and subject in the Agenda<br>(URGENT MEETING)</th><th>Decision of the City Corporation</th></tr>
<tr><td>28.07.2023</td><td>258. இம்மாநகராட்சியில் அனைத்து இருக்கை பிரிவுகளுக்கும் தற்போது தேவைப்படும் அளவிற்கு New Toner (Compatible 12A) 50 (ஐம்பது எண்ணிக்கை) 24.07.2023 தேதியன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதில் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கவும் மேலும், நடப்பாண்டிற்கு கூடுதல் Toner எண்ணிக்கை மற்றும் தேவைப்படும் அளவிற்கு Toner Refilling செய்து கொள்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><table><tr><th>வ.எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளியின் தொகை ரூ.</th></tr><tr><td>1</td><td>Unicon System, Thanjavur</td><td>643/-</td></tr><tr><td>2</td><td>JP Traders, Thanjavur</td><td>610/-</td></tr><tr><td>3</td><td>Opal Systems, Thanjavur</td><td>527/-</td></tr></table><br><u>அலுவலககுறிப்பு</u><br>1. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Opal System, Thanjavur விலைப்புள்ளி ஏற்கலாம்.<br>2. மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.5473 /2023/டி1)</td><td>அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது</td></tr>
<tr><td>28.07.2023</td><td>259. தஞ்சாவூர் மாநகரம், தஞ்சாவூர் நகரம் மேலவெளி கிராமம், வார்டு எண். 7, பிளாக் எண். 19, நகரளவு எண். 17/1, 18, (பழைய நகரளவு எண். 201 பகுதி) - ல் 9835.5 ச.மீ பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனை பிரிவுகளாக பிரித்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனை பிரிவு வரைபடத்திற்கு ம.வ/த.உ.தி.கு எண். SWP/37/2022, திட்ட அனுமதி எண். 69/2022 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி கடிதம் Roc.No. EYCZH07Z(3496)/2022/TCP, நாள். 19.10.2022-ல் வரப்பெற்றுள்ளது. மின்சார வாரிய அலுவலகத்தின் வழியாக மின் இணைப்புகள் பெறப்பட்டுள்ளது. மேலும், மழைநீர் வடிகால் கட்டமைப்பிற்கு மாநகராட்சிக்கு தொகை செலுத்தப்பட்டுள்ளது. திட்ட சாலை அமைப்பு, பூங்கா மற்றும் பொது ஒதுக்கீடு மனை வரைபடத்தில் உள்ளவாறு இம்மாநகராட்சிக்கு தானபத்திரம் வழங்கப்பட்டுள்ளது. மாமன்றத்தின் ஒப்புதலுடன் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.</td><td>ஒப்புதல் வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு</u><br>உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான திட்ட சாலை அமைப்பு, பூங்கா மற்றும் மனைபிரிவு வரைபடத்தில் உள்ளவாறு பொது ஒதுக்கீடு இடத்தினை தானமாக பெறலாம். அதன்படி மேற்படி மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.11945/2022/MCF1) | |
| **28.07.2023** | 260. **தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 51 வரையிலான வார்டுகளில் பொது மக்கள் அனைவரும் தங்கள் சேவைகளை பெறவும், புகார்களை தெரிவிக்கவும், பொது மக்கள் நலன் கருதி டிஜிட்டல் மயமாக்கலின்படி விரைவு துலங்கல் குறியீடு (QR CODE) என்ற மென்பொருள் செயலியை செயல்படுத்திட 47000 எண்ணிக்கையிலான துலங்கல் குறியீடு (QR CODE) வாங்கும் பணி மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.15.00/- இலட்சத்தை ( ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.**<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத்தொகை ரூ.15.00/- இலட்சத்தை (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினை 2023-24ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலம்.<br>3. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ள மாமன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண்.8022/2023/எம்சிஇ1) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

| | | | |
|---|---|---|---|
| 28.07.2023 | **261.** | <u>மாண்புமிகு மேயர் அவர்கள் கொண்டு வந்துள்ள நன்றி அறிவிப்பு தீர்மானம்</u><br>தமிழகத்தின் சிறந்த மாநகராட்சியாக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்கு சிறப்பான சேவைகளை நிறைவேற்றி வரும் தஞ்சை மாநகராட்சிக்கென்று தனி சிறப்புகள் உண்டு.<br>தஞ்சாவூர் மாநகராட்சி, நகராட்சியாக இருந்தபோதே பாரத பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்களுக்கும், தமிழகத்தின் முன்னாள் முதல்வர்கள் திரு கு.காமராசர், திரு சி.என்.அண்ணாதுரை, டாக்டர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஆகியோருக்கும் வரவேற்பு வழங்கிய பெருமை இம்மாமன்றத்திற்கு உண்டு. அதைப்போல நமது தமிழ்நாடு மாண்புமிகு முதல்வர் அவர்களும் கடந்த 2007ம் ஆண்டில் இம்மாநகராட்சிக்கு வருகை புரிந்து திடக்கழிவு மேலாண்மை திட்ட வாகனங்களை பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்ட வரும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்கள்.<br>அதே போன்று தி.மு.க. மாநில இளைஞரணி செயலாளரும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான மரியாதைக்குரிய அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடந்த 27.06.2022 அன்று இம்மாநகராட்சிக்கு வருகை புரிந்து மாநகராட்சியில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிச் சென்றுள்ளார்கள்.<br>தற்பொழுது தி.மு.கழக தலைவரும், தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுமான தளபதி அவர்கள் நேற்று 27.07.2023 அன்று தஞ்சை சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் ரூ.133.56 கோடி மதிப்பீட்டில் இம்மாநகராட்சியால் கட்டி முடிக்கப்பட்டுள்ள பல்வேறு கட்டிடங்களை திறந்து வைக்கவும், ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஆணையர் குடியிருப்புக்கு அடிக்கல் நாட்டிடவும் வருகை தந்து தஞ்சாவூர் மாநகராட்சிக்கும், இம்மாமன்றத்திற்கும் பெருமை சேர்த்தமைக்கு தஞ்சை மாநகர பொது மக்களின் சார்பாகவும், இம்மாமன்றத்தின் சார்பிலும் தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கோடானு கோடி நன்றியை தெரிவித்துகொள்ளப்படுகிறது. | அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேறியது |

| | | |
|---|---|---|
| 28.07.2023 | **262.** <u>மாண்புமிகு மேயர் அவர்கள் கொண்டு வந்துள்ள நன்றி அறிவிப்பு தீர்மானம்</u><br>நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்கள், துணை மேயர்கள், மன்றத்தலைவர்கள், மன்றத் துணைத்தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு ஜுலை 2023 முதல் மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கிட அரசாணை (நிலை) எண்.98, நாள் 13.07.2023–ல் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த அரசாணையின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்களுக்கு ரூ.30,000/–மும், துணை மேயர்களுக்கு ரூ.15,000/–மும், மாமன்ற உறுப்பினர்களுக்கு ரூ.10,000/–மும் வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது. தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக மேற்கண்டவாறு மதிப்பூதியங்களை வழங்கிட உத்திரவிட்ட தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இம்மாமன்றத்தின் சார்பில் கோடானு கோடி நன்றியை தெரிவித்துகொள்ளப்படுகிறது. | அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேறியது |

நாள் : 01.08.2023<br>இடம்: தஞ்சாவூர்.

ஒம்./ சண்.இராமநாதன்,<br>மேயர்.

// உண்மை நகல் //

**மேயர்,**<br>தஞ்சாவூர் மாநகராட்சி.

பெறுநர்

1) மாவட்ட ஆட்சித்தலைவர், வளர்ச்சி பிரிவு, தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–600 028 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, உடன் தணிக்கை பிரிவு, தஞ்சாவூர் மாநகராட்சி.

நகல் உதவி திட்ட அமைப்பாளர், தஞ்சாவூர் மாநகராட்சி (மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய)
„ சி5–மாமன்றக்கூட்ட எழுத்தர்.
„ அலுவலக விளம்பர பலகை.